1979 மார்ச் 17]

எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக 22 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட இருக்கிறது. மேலும், இராதாபுரம் தொகுதியிலே இன்னும் பாசன வசதியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் கன்னியாகுமரி மாவட்டத்திலே எத்தனை ஏக்கர் நிலம் பயன்பெறும்? நெல்லை மாவட்டத்திலே எத்தனை ஏக்கர் நிலம் பயன்பெறும் என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக என்னிடத்திலே தற்போது குறிப்பு இல்லை. தனியாகக் கேட்டால் விவரங்கள் சொல்லலாம்.

சடையநேரிக்குளத்தில் ஆக்கிரமிப்பு.

*வினா எண். 453—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், மெஞ்ஞானபுரம் சடையநேரிக் குளம், பலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற, அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) திருநெல்வேலி மாவட்டம், மெஞ்ஞானபுரம் கிராமத்தில் உள்ள சடையனேரி குளத்தின் 1.34 ஏக்கர் நிலங்களை கிராம மக்களில் ஒருவர் மட்டும்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

(ஆ) ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு வருவாய்த்துறையின் உதவியுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. இரா. அமிர்தராஜ்: துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குளத்திலே ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர் யார்? அப்படி அவர் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதால் மற்ற விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், ஆகவே, அந்த ஆக்கிரமிப்பாளரை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, தற்போது ஆக்கிரமிப்பு செய்திருக்கிறவருடைய, பெயர் சுடலைமாட நாடார் என்பது. 1.34 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்ததன் காரணமாக வருவாய்த்துறை மூலமாக சர்வேயர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Specific research for agro-ecological findings.

*Q. No. 454— Thiru SALEM M. ARUMUGAM ; Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(a) whether there is any proposal to conduct location Specific Research for agro-ecological findings in this State with the financial assistance from the International Bank of Reconstruction and Development ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் உலக வங்கி நிதி உதவியுடன் வேளாண்மை மண் அமைப்புப் பற்றித் தனி சிறப்பு ஆராய்ச்சி (Location specific research for agro-ecological findings) நடத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக-பன்னாட்டு புனரமைப்பு மற்றும் வளர்ச்சி வங்கி இணைந்த குழு (ICAR-IBRD Inter disciplinary scientific panel) லின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. நாளாவட்டத்தில் அக்குழுவின் கூட்டம் நடந்து அதன் முடிவுகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு தெரிவிக்கப்படும். மேற்படி செயற்குறிப்பு ஒப்புதல் பெற்றால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் திட்டம் செயல் படுத்தப்படலாம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத்தலைவர் அவர்களே, தற்பொழுது அமைச்சர் அவர்கள் அறிவித்த பன்னாட்டு வேளாண்மை மண் வளப் பரிசோதனை ஆராய்ச்சியின் முடிவும் தமிழக மண் வளப் பரிசோதனை ஆராய்ச்சியின் முடிவும் ஒருமைப்பாட்டுடன்